FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8337231

1. District : கடலூர் PS: ஊழல் த.க.பிரிவு Year: 2026 FIR No.: 10/2026 Date: 24.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act, 1988 as amended by the Prevention of corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7, 12 ரபம 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2026 Date to : 23.10.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.00 hrs Time to : 21.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 24.10.2026 Time : 18.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-III Time : 18.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நேரில் தெரிவித்தது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ. தென் மேற்கு

Beat Number : (b) Address : கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ஹ. நசிமா பானு (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.
தொழில் முகவரி
ஆய்வுக் குழு அலுவலர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. S. இராமகிருஷ்ணன், வரைவாளர் நிலை-III, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
2. V. அருண்சங்கர், S/o வேலாயுதம், பதிவுபெற்ற பொறியாளர், உரிமையாளர் A-Square Planners, கடலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

24/10/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S. SUNDARARAJ

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 24.10.2026 ஆம் தேதி காலை 18.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி. ஹ.நசிமா பானு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், ஹ.நசிமா பானு, ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.IC–1/555/2026, நாள்: 24.10.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு சம்மந்தமாக – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் சம்மந்தமாக. கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் ஆய்வுக்குழு ஆய்வாளரான நான் 23.10.2026 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும் போது, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு வீட்டு மனை அனுமதி, புதிய நகர் Layout அனுமதி, கட்டட அனுமதி ஆகியவற்றிற்காக வரும் பொதுமக்களிடமிருந்து பதிவுபெற்ற பொறியாளர்கள் மூலம் அலுவலக ஊழியர்கள் லஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் உடனடியாக புறப்பட்டு கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 2.15 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.S.சுந்தரராஜ் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேற்படி கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக அலுவலர்கள் மற்றும் பதிவுபெற்ற பொறியாளர்கள் ஏற்கனவே பொதுமக்களிடமிருந்து பெற்று வைத்துள்ள இலஞ்சப்பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் திரு.S.சுந்தரராஜ் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர்

24/10/26

திரு.S.சுந்தரராஜ் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 2.45 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு கடலூர் – பண்ருட்டி மெயின் ரோடு, கோண்டூர் கிராமத்தில் உள்ள தமிழ் முத்து நகரில், வடக்கு தெற்காக உள்ள நகர் சாலையில் கிழக்கு திசையில் உள்ள தெருவில் வடக்கு பார்த்தவாறு அமைந்துள்ள கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 3.00 மணிக்கு அலுவலகத்தின் சுற்றுச்சுவரில் உள்ள இரும்பு கேட்டை திறந்து உள்ளே சென்று பின்னர் திறந்திருந்த அலுவலக மெயின் கதவின் வழியாக உள்ளே சென்று மெயின் ஹாலில் இடது புறத்தில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் A.விஜயலட்சுமி (வயது 55), க/பெ.சந்திரசேகரன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாகவும், வீட்டு முகவரி நெ.178/113, போடிச்செட்டி தெரு, திருப்பாபுலியூர், கடலூர் என்றும் தெரிவித்தார். அவரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டேன். பின்னர் அவரிடம் உதவி இயக்குநர் பற்றி விசாரிக்க, அவர் உதவி இயக்குநர் பணியிடம் காலியாக உள்ளதாகவும், விழுப்புரம் உதவி இயக்குநர் கூடுதல் பொறுப்பு வகிப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இல்லாதபோது பொறுப்பு அலுவலர் யார் என்று விசாரிக்க, அதற்கு அவர் மேற்பார்வையாளராக பணிபுரியும் தான்தான் பொறுப்பு அலுவலர் என்று தெரிவித்தார். பின்னர் அவரிடம் நான் மேற்படி அலுவலகத்தை, ஆய்வு செய்யப்போகும் விவரத்தை தெரிவித்து ஆய்வின்போது உடனிருக்குமாறு அறிவுறுத்தி, அவர் முன்னிலையில் நானும், எனது அறிவுரையின்படி காவல் ஆய்வாளர் திரு.S.சுந்தரராஜ் மற்றும் காவல் குழுவினரும் சுயபரிசோதனை செய்துகாண்பித்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் அவரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டை கேட்க, அவர்

24/12/26

பணியாளர்களின் ரொக்க கையிருப்பு பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அப்போது என்னுடன் வந்த காவல் குழுவில் இருந்த பெண் காவலர் உதவியுடன் திருமதி.விஜயலட்சுமி அவர்களை மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் ரூ.500/– பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, தான் காலை அலுவலகம் வரும்போது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 23.10.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் ரூ.500/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு ஹாலில் நின்றிருந்த நபர்களை விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் A.குமார், வயது–32, த/பெ. ஆறுமுகம், கதவு எண்.15–முள்ளிகிராம்பட்டு ரோடு, ஓசூர் அம்மன் கோவில் அருகில், நெல்லிக்குப்பம் என்றும் தான் பதிவு செய்யப்பட்ட பொறியாளராக இருப்பதாகவும், இவ்வலுவலகத்தின் அருகிலேயே A Cube Planners என்ற பெயரில் அலுவலகம் வைத்துள்ளதாகவும், தானும் தனது மனைவி ஹேமமாலினியும் சேர்ந்து கட்டிட வரைபடம் மற்றும் மனைப்பிரிவு வரைபடம் ஆகியவை தயார் செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் அனுமதி பெற்று தருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.7,530/– இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் விசாரிக்க, அவர் தனது மனைவி ஹேமமாலினி என்பவருக்கு குழந்தை பேறு தொடர்பாக கடலூர் New Life Hospital க்கு செல்வதற்காக கொண்டுவந்த பணம் என்று தெரிவித்து, ஏற்கனவே மேற்கொண்ட சிகிச்சை தொடர்பான Prescription–ஐ தனது மனைவியின் கைபேசியில் இருந்து காண்பித்ததால், மேற்படி பணம் ரூ.7,530/– திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரிடம் எதற்காக இவ்வலுவலகம் வந்தீர்கள் என்று கேட்டதற்கு, விண்ணப்ப எண்.B87JIPRK (site approval) and SWP/BPA/943846/2026 (Building approval), ஆகியவற்றின் விண்ணப்பங்களின் தற்போதைய நிலை அறிந்துகொண்டு, பின்னர் இவ்வலுவலகத்திலிருந்து தானும், தனது மனைவியும் மருத்துவமனைக்கு செல்வதற்காக வந்ததாக தெரிவித்தார். பின்னர் பெண் காவலர் மூலம் அவருக்கு அருகில் இருந்த

24/10/26

அவரது மனைவி திருமதி.ஹேமமாலினி, வயது 28, க/பெ.குமார் என்பவரை மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. அவருக்கு அருகில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.அனுப்பிரியா, வயது 31, த/பெ.சிகாமணி என்றும், தான் பதிவுபெற்ற பொறியாளர் என்றும், தனது முகவரி நெ.29, காவேரி தெரு, சிங்காரம் அவென்யூ, கூத்தப்பாக்கம், கடலூர் என்றும், தான் தனது Client–ன் கிள்ளை கிராம புல எண்.96ல் உள்ள நிலம் தொடர்பாக FMB–ல் உள்ள சந்தேகத்தை கேட்பதற்காக இவ்வலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை பெண் காவலர் மூலம் மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் ஹாலின் தெற்கு திசையில் மேற்குபுறத்தில் இருந்த அறையில் சோதனை செய்ய அதில் இரு நபர்கள் இருந்தனர். அதில் ஒருவரை விசாரிக்க அவர் தனது பெயர் E.ராஜசேகர், வயது 31, த/பெ.ஏழுமலை என்றும், தான் இவ்வலுவலகத்தில் Surveyor cum Assistant Draftsman ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தனது முகவரி நெ.41, பிள்ளையார் கோயில் தெரு, களையூர் கிராமம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்றும், தற்போது தற்காலிகமாக நெ.15, சாரதா நகர், கோண்டூர், கடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிவித்தார். அவரை காவலர் மூலம் சோதனை செய்ய அவரிடம் ரூ.200/– பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, தான் காலை அலுவலகம் வரும்போது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 23.10.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் ரூ.200/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருக்கு அருகில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் E.தயாநிதி (வயது 26), த/பெ.ஏழுமலை என்றும், தான் இவ்வலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருவதாகவும், தனது வீட்டு முகவரி நெ.404, மாரியம்மன் கோயில் தெரு, திருப்பச்சாவடிமேடு, கொண்டங்கி அஞ்சல், விழுப்புரம் வட்டம் மற்றும் மாவட்டம் என்று தெரிவித்தார். அவரை காவலர் மூலம் சோதனை செய்ய அவரிடம் ரூ.250/– பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, தான் காலை அலுவலகம் வரும்போது சொந்த

24/10/26

செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 23.10.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் ரூ.250/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலின் மேற்கு திசையில் இருந்த அறையை சோதனை செய்ய அதில் ஒருவர் இருந்தார். அவரை விசாரிக்க அவர் தனது பெயர் T.சித்ரா (வயது 46), க/பெ.R.குமரன், நெ.15C, சாயப்பேட்டை தெரு, செம்மண்டலம், கடலூர் என்றும், தான் இவ்வலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரை பெண் காவலர் மூலம் மறைவிடத்தில் சோதனை செய்ய அவரிடம் ரூ.100/– பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, தான் காலை அலுவலகம் வரும்போது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 23.10.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் ரூ.100/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அவர்களுக்கு அருகிலிருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் V.அருண்சங்கர் வயது 44, த/பெ வேலாயுதம், கதவு எண்.131/90 திருவள்ளுவர் நகர், 10வது குறுக்குத்தெரு, காட்டுக்கூடலூர் ரோடு, விருத்தாசலம் என்றும், தான் பதிவு பெற்ற பொறியாளர் என்றும், தான் இவ்வலுவலகத்திற்கு அருகில் A Square Planners என்ற பெயரில் அலுவலகம் வைத்துள்ளதாகவும், தான் கட்டிட வரைபடம் மற்றும் மனைப்பிரிவு வரைபடம் ஆகியவை தயார் செய்து மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் அனுமதி பெற்று தருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. அருண்சங்கர் அலுவலகத்தில் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக பணம் வைத்திப்பருப்பதாக எனக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி அவரை அழைத்துக்கொண்டு மேற்படி கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் தெற்கு திசையில் சுமார் 30 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள அவரது A Square Planners அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.30 மணிக்கு சென்று அலுவலகத்தை சோதனை

24/10/26

செய்ததில், அவர் மேஜையில் ஒரு பை இருந்தது. அதனை சோதனை செய்ய அதில் ரூ.65,500/– (131 x 500) பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால், மேற்படி பணம் ரூ.65,500/– இவ்வலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணம் என கருதி மேற்படி பணம் ரூ.65,500/– மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டு மீண்டும் இவ்வலுவலகம் வந்தபோது அலுவலகத்திற்கு வந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.வீரமகேஷ்குமார் (வயது 48), த/பெ.சுருளிமகாலிங்கம், தான் இவ்வலுவலகத்தில் Draftsman ஆக பணிபுரிந்து வருவதாகவும், தனது வீட்டு முகவரி, நெ.9/18, G.P. ரோடு, கண்டிக்குடி, கொடைக்கானல் வட்டம், திண்டுக்கல் மாவட்டம் என்றும், தற்போது நெ.8/18, ஸ்ரீனிவாசன் தெரு, சுப்புராயலுநகர், திருப்பாபுலியூர், கடலூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் மதிய உணவிற்காக வெளியில் சென்று தற்போது அலுவலகம் வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1850/– பணம் இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க, தான் காலையில் அலுவலகம் வரும்போது சொந்த செலவிற்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பணியாளர்களின் கையிருப்பு பதிவேட்டில் 23.10.2026 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், அப்பணம் ரூ.1850/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த இரண்டு ஜகபேசிகளை வாங்கி சோதனை செய்ததில், அவர் பயன்படுத்தும் 7418426736 என்ற கைபேசி எண்ணில் சந்தேகத்திற்குறிய UPI பரிவர்த்தனை இல்லாததால், அக்கைபேசி அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் பயன்படுத்தும் மற்றொரு கைபேசி எண்.9342605362–ல் உள்ள GPay UPI மூலம் கடந்த 13.10.2026 முதல் 16.10.2026 வரை ரூ.1,88,000/– சந்தேகத்திற்குறிய பண வரவு பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது தெரியவந்தது. மேற்படி கைபேசி எண் சம்மந்தமாக வீரமகேஷ்குமாரை விசாரணை செய்ததில் அவரது உறவினரான திருமதி.பொன்னம்மாள் என்பவர் பெயரில் உள்ள IOB வங்கி சேமிப்பு கணக்குடன் 9342605362 கைபேசி எண் இணைக்கப்பட்டுள்ளதாகவும்,

24/10/26

அந்த கைபேசி எண் மற்றும் வங்கி கணக்கு பண பரிவர்த்தனைகளை தான் மேற்கொண்டுவருவாக தெரிவித்தார். பின்னர் GPay UPI IDஐ ஆய்வு செய்ததில் (1) 13.10.2026 ஆம் தேதி மாலை 6.15 மணிக்கு Mr.R.Alvar என்பவரிடமிருந்து SCHOOL APPROVAL என குறிப்பிட்டு UPI transaction ID 628615733799 ன்படி ரூ.60,000/– பெறப்பட்டுள்ளது. மேலும், (2) 13.10.2026 ஆம் தேதி இரவு 7.32 மணிக்கு S.Kumar என்பவரிடமிருந்து UPI transaction ID 177151927034 ன்படி ரூ.60,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனைகள் பற்றி அவரிடம் விசாரிக்க SHREE MAHAVEER SAI SKANDHA SCHOOL Building plan approval–க்காக அந்த பள்ளியின் சார்பாக திரு.ஆழ்வார் மற்றும் திரு.குமார் மேற்கண்ட UPI transaction ID மூலம் அலுவலக செலவிற்கு அனுப்பியதாக தெரிவித்து அது சம்மந்தமான application No.SWP/BPA/0786417/2026 என்ற கோப்பை எடுத்து ஆஜர் செய்தார். (3) 14.10.2026 ஆம் தேதி மாலை 5.03 மணிக்கு Manoharan A r என்ற பெயரில் UPI transaction ID 628796764064 ன்படி ரூ.15,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனை பற்றி அவரிடம் விசாரிக்க பதிவுபெற்ற பொறியாளர் திரு.மனோகரன் என்பவர் சிதம்பரம் வட்டம் குமராட்சி ஊராட்சிக்குட்பட்ட கூத்தங்கோயில் கிராமத்தில் புதிதாக போடப்பட்ட தீபிகா நகர் மனைபிரிவில் சிவசண்முகம் என்பவர் பெயரில் அனுமதி வேண்டி மேற்கண்ட UPI transaction ID மூலம் அலுவலக செலவிற்கு அனுப்பியதாக தெரிவித்து அது சம்மந்தமான கோப்பு எண்.1028/2026/க.மா. எடுத்து ஆஜர் செய்தார். (4) 14.10.2026 ஆம் தேதி இரவு 8.18 மணிக்கு Saratha Arumugam என்ற பெயரில் UPI transaction ID 628725447292 ன்படி ரூ.10,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனை பற்றி அவரிடம் விசாரிக்க பதிவுபெற்ற பொறியாளரான பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் திருமதி.சாரதாம்பாள் என்பவர் சிதம்பரம் வட்டம் கீரப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பூதங்குடி கிராமத்தில் உள்ள மனைக்கு கலையரசன் பெயரில் அனுமதி வேண்டிய விண்ணப்பத்திற்காக மேற்கண்ட UPI transaction ID மூலம் அலுவலக செலவிற்கு அனுப்பியதாக தெரிவித்து அது சம்மந்தமான கோப்பு ROC No.

24/10/26

3EX6D4UQ/2026/TCP, dated 09.10.2026 என்ற கோப்பின் நகல் எடுத்து ஆஜர் செய்தார். (5) 15.10.2026 ஆம் தேதி மாலை 3.27 மணிக்கு Kiruba Sankar என்ற பெயரில் UPI transaction ID 665471870807 ன்படி ரூ.3,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனை பற்றி அவரிடம் விசாரிக்க பதிவுபெற்ற பொறியாளரான Kiruba Sankar என்பவர் அலுவலக செலவிற்காக அனுப்பியது என்று தெரிவித்தார். (6) 16.10.2026 ஆம் தேதி இரவு 7.18 மணிக்கு Ponnammal Chinnamurugan என்ற பெயரில் UPI transaction ID 712291100950 ன்படி ரூ.40,000/– பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பரிவர்த்தனை பற்றி அவரிடம் விசாரிக்க தான் ஏற்கனவே பதிவு பெற்ற பொறியாளர்களிடம் அலுவலக செலவிற்கு பெற்ற தொகையினை எனது உறவினரான பொன்னம்மாள் என்பவர் பெயரில் SBI வங்கியில் உள்ள மற்றொரு சேமிப்பு கணக்கில் அனுப்பியதை அவர் திரும்ப எனக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவித்தார். மேலும் மேற்கண்ட பரிவர்த்தனைகளை அவரது கைபேசியில் இருந்து Screenshot செய்து பிரிண்ட் எடுத்து ஆஜர்படுத்தினார். மேற்கண்ட ஆவணங்களை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்னர் கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அலுவலக வருகை பதிவேடு–2026 மற்றும் பணியாளர் கையிருப்பு பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், 1) திருமதி. A.விஜயலட்சுமி, மேற்பார்வையாளர், 2) திரு. S.வீரமகேஷ்குமார், Draftsman, 3) V.அருண்சங்கர் பதிவு பெற்ற பொறியாளர், உரிமையாளர் A Square Planners, கடலூர் (தனிநபர்) ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.65,500/– (500 x 131) மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்தபோது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி

24/10/26

ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 03.00 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 09.30 மணிக்கு முடிக்கப்பட்டது. 23.10.2026 ந்தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.65,500/–, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த லஞ்சப்பணமாக இருக்கலாம் என தெரியவருகிறது. எனவே, திரு. S.வீரமகேஷ்குமார், வரைவாளர் நிலை–3, கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மற்றும் V.அருண்சங்கர் பதிவு பெற்ற பொறியாளர், உரிமையாளர் A Square Planners, கடலூர் (தனிநபர்) ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் புகார் அளிக்கிறேன். ஒப்பம் ..... (ஹ.நசிமா பானு) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர்.

Honourable Madam,

Received the above computer typed complaint on 24.10.2026 at about 18.30 hours, hence I registered a case in Cuddalore Vigilance and Anti–Corruption Cr.No.10/2026, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 24.10.2026 at 20.30 hours. sd/– xxxx 24/10/2026 (S.SUNDRARAJ), Inspector of Police, V&AC, Cuddalore.

24/10/26
Inspector of Police
V&AC, Cuddalore